# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.62/2019

Deposition of RW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 23.08.2023.

Evidence Recorded Time: 12.01 P.M to 12.15 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மாரப்பன் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | காளியப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேல்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். 22.04.2019-ம் தேதியில் நான் TN 52 A 9916 டாரஸ் லாரியை ஓட்டி சென்றேன். என் வண்டிக்கு பின்னால் இருசக்கர வாகனம் மோதியதாக என் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி நான் வாகனத்தை திடீரென வலதுபுறம் திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் நான் வண்டியை திருப்புவதற்கு முன்பாக சிக்னல் போட்டு, கையையும் காட்டி பின்னால் பார்த்து வண்டியை திருப்பிய போது பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் வேகமாக எனது 12 சக்கர லாரியின் வலது இரண்டாவது சக்கரத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தினார். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இதுவரை நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்திற்கு யார் காரணம் என்றால் விபத்திற்கு நான் காரணம் அல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் நான் ஆஜராகாமல் நான் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பொட்டேனேரியில் JSW நிறுவனம் முன்பாக வாகனத்தை நிறுத்தியிருந்தேன். நான் லாரியை ரோட்டின் வலது புறத்தில் நிறுத்தி இருந்த இடம் பார்க்கிங்

இடம் இல்லை என்றால் சரிதான். நான் இடது புறமாக பார்க்கிங் செல்வதற்காக வண்டியை மண் ரோட்டில் நிறுத்தியிருந்தேன். எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 ஓட்டுநர் உரிமம் என்னுடையதுதான். என் மீது மேச்சேரி காவல் நிலையத்தில் வண்டியை ஆஜாக்கரதையாக ஓட்டியது சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் சாலை விதிகளை பின்பற்றி ரோட்டின் இடது ஓரம் மெதுவாகத்தான் வந்தார் என்றால் சரியல்ல, அவர் வேகமாக வந்தார். விபத்து ஏற்பட்ட சாலை பிராதன சாலை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9 வரைபடத்தில் ரோட்டின் இடது புறத்தில் தான் விபத்து நடந்ததாக காணப்படுகிறது என்றால் அதில் அவ்வாறு தான் காணப்படுகிறது. என் மீது தவறு இல்லை என்றால் நான் இந்த வழக்கில் ஆஜராகியிருப்பேன் என்றால் சரியல்ல. என் மீது குற்றம் இல்லை என்றால் நான் குற்றவியல் வழக்கை நடத்தியிருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.